# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 12 |
| Name | : | **திரு. சிவக்குமார்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02.03.2026

**<u>முதல் விசாரணை: (சாட்சி காணொளி காட்சி வாயிலாக சாட்சியம் அளிக்கிறார்.)</u>**

1. நான் தற்போது நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக நான் பணியாற்றி வருகிறேன். கடந்த 23.06.2024 ம் தேதி மாலை 18.30 மணிக்கு திருப்புவனம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக நான் பணியில் இருந்த போது நிலைய குற்ற எண் 295/2024 சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(ii) இதச கீழான வழக்கினை நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஜெயக்கண்ணன் என்பவர் பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கையினை நான் பெற்று வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டேன் . அன்றைய தினமே மாலை 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜசேகர், அய்யம்பாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 8** ஆகும்.

**மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 9** ஆகும். பின் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்ப இடத்தில் 19.30 மணியளவில் ரத்தம் பட்ட மண் சிறிதளவு , ரத்தம் படாத மண் சிறிதளவு சுமார் 52 செ. மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ- 10** ஆகும். நான் மகஜரில் கைப்பற்றிய **ரத்தம் பட்ட மண் சிறிதளவு அ.த.பொ.சா.ஆ- 2** ஆகும். **ரத்தம் படாத மண்சிறிதளவு அ.த.பொ.சா.ஆ- 3** ஆகும். பின்பு வழக்கின் சாட்சிகள் கடம்பவள்ளி, அழகு நித்யா, சூரவள்ளி , பிரபாகரன், இந்திராணி மற்றும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் சாட்சிகள் அய்யம் பாண்டி, ராஜசேகர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 24.06.2024 ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமான எதிரியை தேடி வரும் போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை முன்பாக காலை 06.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி கண்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து விசாரணை செய்த போதுஅவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அருள்மணி , கோபுரம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அருள்மணி , கோபுரம் ஆகியோர்களை விசாரித்து 24.06.2024 ம் தேதி தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு எதிரி மற்றும் சாட்சிகளுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 19.08.2024 ம் தேதி வழக்கில் காயம் பட்ட சாட்சிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்து காயச்சான்றிதழ் வழங்கிய மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனையின் மருத்துவர் திரு. அமரேஸ்வர்மா ரெட்டி என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. ஜெயக்கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்கில் காயம் பட்ட மற்றொரு சாட்சியான மல்லிகா என்பவரை 23.06.2024 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்ற பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91

மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

4. படிவம் 91 அ.த.சா.ஆ- 11 ஆகும். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(ii) இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுயை விசாரணையின் போது அ.சா.3 சூரவள்ளி என்பவர் வழக்கு சம்பவம் பற்றியும் சாட்சி அய்யம் பாண்டி , ராஜசேகர் ஆகியோர் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த போது உடன் இருந்து கையொப்பம் இட்டதாகவும் சாட்சி அருள் மணி நான் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற போதும் உடன் இருந்ததாக எனது விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை :**

1. திருப்புவனத்தில் சார்புஆய்வாளர் அலுவலகம் தரை தளத்திலும் ஆய்வாளர் அலுவலகம் ஆன எனது அலுவலகம் முதல் தளத்திலும் ஒரே கட்டிடத்திலும் உள்ளது என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் 23.06.2024 ம் தேதி 18.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டு பதிவு செய்தபோது நானும் எனது அலுவலத்தில் இருந்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 23.06.2024 ம்தேதி 18.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. ஜெயக்கண்ணன் வழக்கில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. வழக்கின் புகார்தாரரான கடம்பவள்ளி எனது காவல்நிலையத்தில் வந்து தான் புகார் கொடுத்தாரா என்றால் அவ்வாறு இல்லை. புகார் எத்தனைமணிக்கு எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் வேலம்மாள் மருத்துவமனையில் வைத்து பெறப்பட்டதாக எனது விசாரணையில் தெரியவந்தது. நேரம் சரியாக நினைவில் இல்லை. எனது காவல்நிலையத்தில் அடுத்து தெற்கு உள்ள மதுரை ராமேஸ்வரம் நெடுஞ்சாலை தெற்கே சுமார் 500 மீ தொலைவில் அதே ரோட்டில் திருப்புவனம் அரசுமருத்துவமனை உள்ளது என்றால் சரிதான்.

3. எனது விசாரணையின் படி வழக்கில் காயம் பட்ட நபர்கள்முதலில் திருப்புவனம் அரசுமருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதன் பிறகு வேலம் மாள் மருத்துவமனைக்கு சென்றதாக தெரியவந்தது என்றால் சரிதான்.

திருப்புவனம் அரசு மருத்துமனையில் இருந்து மெடிக்கல் இன்டிமேசன் வந்திருக்கும் ஆனால் அதை நான் பார்க்கவில்லை. வழக்கின் எதிரி கண்ணன் என்பவருக்கும் இந்த சம்பவத்தில் காயம் இருந்தது என்று என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான்.

4. வழக்கின் எதிரி கண்ணன் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக முதன்முதலில் திருப்புவனம் காவல்நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு காயச்சான்றிதழ் வழங்கபட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது தெரியும், காயச்சான்றிதழ் பெற்றது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கான மருத்து காயச்சான்றிதழை பெறவோ அல்லது அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரையயோ நான் இந்த வழக்கில் சாட்சியமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**5.** இந்த வழக்கில் அ.சா.1 கொடுத்ததாக சொல்லும் புகார் முதல் தகவல் இல்லை என்றும் அதற்கு முன்பாகவே எதிரி இந்த வழக்கு சம்பந்தமாக திருப்புவனம் காவல்நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றும் அது இந்த வழக்கில் மறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையில் பணியாற்றி வந்த ஆண்டிச்சாமி என்ற காவலரின் தூண்டுதலின் பேரில் அ.சா.1 ன் டமிருந்து இருந்து எனது ஆலோசனையின் பேரில் அ.த.சா.ஆ. 1 புகார் பின்னிட்டு பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6. நான் சொன்ன தேதியில் 18.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் ராஜசேகர் மற்றும் அய்யம்பாண்டி ( அ.சா.5 ) ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர் அ.த.சா.ஆ- 8 அல்லது வரைபடம் அ.த.சா.ஆ. 9 தயாரிக்கபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.5 அய்யம் பாண்டியிடமிருந்து எழுத்தப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு பின்னால் அந்த பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய ரத்தம் பட்ட மண் சிறிதளவு , ( அ.த.பொ.சா.1) ரத்தம் படாத மண் அ.த.பொ.சா.2 சிறிதளவு சுமார் 52 செ. மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய

அருவாள் சம்பவ இடத்தில் இருந்து நான் கைப்பற்ற வில்லை என்றாலும் அது சம்பந்தமாக அ.த.சா.ஆ-10 நான் தயார் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

7. இந்த வழக்கில் கண்ட புகாரில் அ.சா.4 இந்திராணி சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும் அதில் கண்ட கையொப்பம் அவருடைய கையொப்பம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று 24.06.2024 ம் தேதி காலை 06.00 மணிக்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வைத்து எதிரியை சாட்சி அருள் மணி மற்றும் அ.சா.7 கோபுரம் ஆகியோர் முன்னிலையில் கைது செய்யவில்லை என்றும் அவர்கள் முன்னிலையில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் அப்போது என்னிடம் கொடுக்கவில்லை என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கோபுரம் என்று கையொப்பம் செய்திருப்பது அ.சா.7 ன் கையொப்பம் அல்ல என்றும் யாரோ ஒருவரின் கையொப்பத்தை அ.சா.7 கோபுரம் கையொப்பம் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மல்லிகா என்பவருக்கு காயம் இருந்ததாக நான் விசாரித்தாக சொல்லும் எந்த சாட்சியும் வாக்குமூலம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மல்லிகாவின் மகள் கடம்பவள்ளி மற்றும் அழகு நித்யா ஆகியோர் சொல்லியுள்ளார்கள்.

8. 1 வது சாட்சி கடம்பவள்ளிக்கு காயம் இருந்ததாக எந்த ஒரு மருத்துவ சான்றிதழும் இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த மருத்துவ சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லும் வீட்டில் கடம்பவள்ளியின் 2 மேஜர் மகன்களும் அ.சா.2 அழகு நித்யாவின் 14 வயதுள்ள மகனும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் இந்த சம்பவத்தை பார்த்தார்களா என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. அவர்களின் 3 மகன்களையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை.

9. சம்பவ நடந்ததாக சொல்லும் வீட்டிற்கு அருகில் தொடர்ச்சியாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். 2 வது சாட்சி அழகுநித்யாவின்

வீடு சம்பவ இடத்தில் இருந்து அதே தெருவில் மேற்கு பக்கம் எதிர் வரிசையில் 5 வீடுகள் தள்ளி உள்ளது என்றால் சரிதான். சம்பவ வீட்டில் அ.சா.2 அழகு நித்யா அல்லது கடம்பவள்ளி வீட்டின் மாடியில் வாடைக்குஇருந்ததாக எந்த சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் மல்லிகா அன்றைய தேதியில் குளித்து விட்டு வாசலில் தலை முடியை காய வைத்துகொண்டிருந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் எனது விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

10. அந்த நேரத்தில் அழகுநித்யா , மல்லிகா வீட்டின் மாடியிலும் சாட்சி கடம்பவள்ளி அந்த வீட்டின் தரை தளத்திலும் டிவி பார்த்துகொண்டிருந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அழகுநித்யாவின் மகனும் கடம்வள்ளியின் மகனும் எதிரியுடன் மள்ளுகட்டி உருண்ட போது எதிரிக்கு காயம் ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் அவ்வாறு இல்லை. எதிரியின் பெற்றோர் வீடு அதே ஊரில் ஆக கடைசியில் உள்ளதா என்றால் இல்லை, சுமார் 50 , 60 அடி துாரத்தில் உள்ளது .அந்த விபரத்தை நான் மகஜரிலோ , மாதிரி வரைபடத்திலோ காட்டி யுள்ளேனா என்றால் இல்லை.

11. சம்பவ காலத்திற்கு 6, 7 வருடத்திற்கு முன்பாகவே இந்த எதிரியும் அ.சா.1 . ஆன அவரது மனைவி கடம்வள்ளியும் கருத்துவேற்றுமை காரணமாக தனித்தனியே வாழ்ந்துவந்தனர் என்று எனது விசாரணையில் தெரியா வந்தது என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் இடையில் விவாகரத்து வழக்கு நடந்து வந்தது என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் இருவரும் சேர்ந்து தான் அந்த விவாகரத்து வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.அது சம்பந்தமான ஆவணங்கள் எதையும் நான் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. எதிரி மதுரையில் உள்ள லாரி கம்பெனியில் டிரைவராக பணியாற்றினார் என்றும் அவர் ஓட்டிய லாரி ஆல் இந்தியா பெர்மிட்டு உள்ளது என்றும் பல வெளிமாநிலங்களுக்கு சென்றுவருவாரா என்றால் அவர் டிரைவராக வேலை பார்ப்பது எனது விசாரணையில் தெரியவந்தது. அவர் வெளிமாநிலத்தில் வேலை செய்து விட்டு மாதத்திற்கு 2 நாட்கள் மட்டும் அவரது சொந்து ஊருக்கு

பெற்றோர்களை பார்க்க வந்து செல்வார் என்றால் அது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை.

13.வழக்கில் கண்டவாறு எதிரி, அ.சா.1 கடம்பவள்ளி அ.சா. 2 அழகுநித்யா , அ.சா.8 மல்லிகா ஆகியோரை வெட்டி காயப்படுத்தவில்லை என்றும் அதற்கு மாறாக எதிரி அவர் விடுமுறைக்கு தன்பெற்றோர்களை பார்ப்பதற்காக செல்லப்பனேந்தல் கிராமத்திற்கு வந்து அவர் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது மேலே குறிப்பிட்ட அ.சா.1 , அ.சா.2 மற்றும் அ.சா.8 மற்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் மகன்களும் பயங்கர ஆயுதங்களுடன் எதிரி தூங்கி கொண்டிருந்த வீட்டிற்குள் எதிரியை அவர்கள் வெட்டி காயப்படுத்தினார்கள் என்றும் அது சம்பந்தமாக எதிரி அவர்கள் மீது புகார் கொடுக்க திருப்புவனம் காவல்நிலையத்திற்கு சென்றுள்ளார் என்ற தகவல் தெரிந்து அதில் இருந்து தப்பித்து கொள்வதற்காக எதிரி மீதுபொய்வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14.இந்த வழக்கில் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் அருவாள் எதிரிக்கு சொந்தமானது இல்லை என்றும் அந்த அருவாளை வைத்து எதிரி தாக்கவோ காயப்படுத்தவோ இல்லை என்றால் சரியல்ல. அ.த.பொ.ச.1 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சிகளையும் நேரடியாக விசாரணைசெய்யாமல் நான் எந்த புலன் விசாரணையும் செய்யாமலும் மற்றவர்கள் எழுதிவைத்திருந்த வாக்குமூலங்களிலும் கையொப்பம் மட்டும் செய்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.02 22:50:52 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதி**

**சிவகங்கை.**